**தலாவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலாவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தலாவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நிறுவனமொன்று தயாரித்த பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்குரியதாக கிடைக்கப்பெற்ற ரூபா 2,459,950 முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக கிடைக்கப் | ஏற்றுக்கொள்கின்றோம். | முன்னைய ஆண்டுகளுக்குரிய வருமானம் திரண்ட நிதியத்தில் |

| | | |
|---|---|---|
| பெற்ற ரூபா 5,010,024 நீதிமன்ற தண்டப்பணம் என்பன மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | சீராக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 81,260,569 வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,832,314 தொகையான மீதி மறுசீரமைப்பு செலவினத்தை உறுதிப்படுத்துவதற்கான உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர் பரிந்துரையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சகல செலவினங் களையும் உறுதிப்படுத்து வதற்காக உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(5) ஆம் பிரிவு | உபகட்டுநிதி விடுவிக்கப்பட்டதன் பின்னர்உரிய பணிகள் முடிவடைந்து 10 தினங்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் தாமதமாக தீர்க்கப்பட்ட 08 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 225,200 காணப்பட்டது. | எதிர்காலத்தில் குறித்துரைத்த பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 371(5) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 757(2)(ஆ) | பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையினதும் அதற்குரிய உப அலுவலகத்திற்கும் உரிய 60 பொருள் வகைகளுக்குரிய பொருட்கள் பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்ட 90 பொருட்கள் மற்றும் 589 நூலகப் புத்தகங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 757(2)(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான செயற்படு நிலையில் உள்ள 14 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,234,885 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 57,025,501 ஆகும்.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பெயரில் அரசாங்க வங்கியில் 04 நடைமுறைக் கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அந்த கணக்குகளில் மீளாய்வாண்டு முழுவதும் அதிக அளவான பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த பணத்தை முதலீடு செய்து எந்தவொரு வருமானத்தையும் உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நடைமுறைக் கணக்குகளில் பணத்தை நிறுத்தி வைக்காமல் வட்டி வருமானத்தை உழைப்பதற்கு முடியுமான பிரகாரம் முதலீடு செய்தல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்**<br>2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 6,336,615 ஆதனவரி வருமானத்தை சேகரிப்பதற்கு சிட்டையிடப்பட்டிருந்த போதிலும் அதில் மேலும் ரூபா 3,174,922 தொகை அறவிட வேண்டியிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| (i) | சபைக்கு உரிய 74 கடைகளுக்காக 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 5,066,868 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ii) | சபையினால் வியாபார உரித்து வாடகைக்கு வழங்கப்பட்ட 08 சந்தர்ப்பங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த ரூபா 1,052,642 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | தமுத்தேகம உப அலுவலக வளவில் 08 கடைகள் 2021 மார்ச் மாதம் முதல் கேள்வி கோரி கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,195,255 வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | **அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,075,508 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஏனையவை<br>--------------------<br>03 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டு வரப்படுகின்ற நிலுவை கேள்வி கட்டணம் ரூபா 430,351 காணப்படுகின்ற போதும் அந்தப் பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய வாகனமொன்று 2019 சனவரி 31 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட ரூபா 373,585 நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை நடாத்தி பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு அந்த பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் தலைவரால் பயன்படுத்தப்படுகின்ற கெப் வண்டி 2019 ஏப்ரல் 15 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் காப்புறுதி நிறுவனத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி நட்ட இழப்பு ரூபா 3,400,520 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த விபத்து ஏற்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அது பழுதுபார்க்கப்படாமல் இருந்ததுடன் அந்த பழுதுபார்த்தலுக்காக | ஏற்றுக்கொள்கின்றோம். | விபத்து தொடர்பான பழுது பார்த்தல்களை விரைவாக மேற்கொண்டு காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பரிசோதனை அறிக்கையின் பிரகாரமோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவாகின்ற பணம் காப்புறுதியிலிருந்து அறவிடப்பட்டிருக்குமாயின் 90 சதவீதம் பிரதேச சபையின் தலைவரிடமிருந்தும் மிகுதி 10 சதவீதம் சாரதியிடம் இருந்தும் அறவிடுவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து கிடைத்த ரூபா 5,760,735 ஆன நிதி ஏற்பாட்டின் கீழ் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட கரகஹவெவ கூட்டுப்பசளை தளத்தை நிர்மாணிப்பதற்கு 2012 சனவரி 27 ஆந் திகதி உடன்படிக்கை செய்து 06 மாதங்களில் அந்த வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்காக ரூபா 1,077,389 செலவினமொன்று மேற்கொண்டு அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சபைக்கு கிடைக்கின்ற நிதியத்தின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூடிய விரைவில் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 892,000 பெறுமதியான சபைக்குரிய 03 வாகனங்கள் மற்றும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத டிறக்டர் மற்றும் அரைத்தல் இயந்திரம் என்பன 02-15 வருடங்களுக்கிடையிலான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | இந்த சொத்துக்களை மீண்டும் ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பழுதுபார்த்து மீண்டும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 9,500,000 செலவினத்தை செய்து நிர்மாணிக்கப்பட்ட தமுத்தேகம வாராந்த சந்தைக் கட்டிட முறைமை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் புதன்கிழமை வாராந்த சந்தை தமுத்தேகம நகர மத்தியில் வீதி நெருக்கடியில் நடாத்திச் செல்லப்படுகின்றது. | எதிர்காலத்தில் வாராந்த சந்தையில் புதிய நிர்மாணத்துடனான காணிக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புதிய வாராந்த சந்தை நிலத்தை விரைவாக பயன்படுத்து வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபையினால் ரூபா 5,421,890 செலவில் எப்பாவல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுடலைக்கூடம் அதற்குத் தேவையான அடுப்பு பொருத்தப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 03 ஆண்டுகளை விஞ்சிய காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்வரும் 02 மாதங்களுக்குள் இந்த நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அடுப்பினை பொருத்தி விரைவாக பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |